பதிவெண்: எம். 7030.

# குயில்

கிழமை இதழ்

ஆசிரியர்:

பாரதிதாசன்

விலை 13 காசுகள்

| | | |
|---|---|---|
| குரல்: 1 | புதுச்சேரி, 4-11-58 செவ்வாய் | இசை: 23 |


# மக்கள் பாசறை!

~

காங்கரசு நீங்கர சானதால் அதனைத்
தமிழர் ஒதுக்கித் தள்ளினர், மற்றும்
சட்ட மன்றினர் தந்நலச் சுவரில்
முட்டித், தமிழரை முழுதும் இழந்தனர்,
கட்சித் தலைவர்கள் மக்களைக் கைவிட்டுத்
தமக்குத் தலைவர் தாம்என்று வாழ்ந்தனர்.

ஆதலின் தமிழர் அனைவரும் இந்நாள்
எவர்க்கும் எந்த நிறுவனத் திற்கும்
கட்டுப் படாமல்ஓர் பாசறை கண்டனர்,
'தலைவர் பெரியார்'' என்றுதாம் கொண்டனர்
மக்கட் பாசறை எக்கட் சிக்கும்
எத்தலை வர்க்கும் அடக்கம் இல்லை
என்பதை மீண்டும் மீண்டும் இயம்புவோம்

அரசியல் அறிந்தவர் அறமு ணர்ந்தவர்
இதனை ஊன்றி எண்ண வேண்டும்

''விடுதலை தமிழ கத்திற்கு வேண்டும்''

சாற்றும் இஃது தமிழரின் மூச்சே
ஆதலின் இந்நாள் தமிழர் அனைவரும்
உருவால் பலர்எனில் உணர்வால் ஒருவரே

இந்நாள் எதிரிகள் தமிழருக் கிருப்பினும்
தமிழ கத்தைத் தமிழரே ஆள்வதாய்ச்
சாற்றினும் அதிலே தவறொன் றுமில்லை

தமிழைப் பேசும் தமிழக நிலைமை
இதுஎனில். மற்றத் தமிழகம் எவ்வாறு?

தனிநா டல்ல கேரளம்! தமிழகம்!
தனிநா டல்ல தெலுங்கம் தமிழகம்.
தனிநா டல்ல கன்னடம்! தமிழகம்.

ஆயினும் அவற்றின் நிலைமை வேறே
அங்குளார் அயலார்க் கடங்கி வாழ்குவர்
தம்நிலை உணர்கிலார்! தகுதி காண்கிலர்
உணர்வார் விரைவில்! உணரச் செய்வோம்.

திறக்கட்டும் பாசறைக் கதவு! அயல்மேற்
பறக்கட்டும் தமிழர் பட்டாளம்! அயலார்
தொடர்பினை அறுத்துத் தொலையச்
செய்யட்டும்
இங்குத் தமிழ்க்கொடி யேறுக
எங்கும்பின் ஏறும்! பெரியார் வெல்கவே.

~

# பார்த்து நட!

தெருவோரம் இடது பக்கம்
செல்லும் நல்ல பிள்ளை!
வருபவர்மேல் இடித்துக் கொள்ளும்
பிள்ளை ஒரு நொள்ளை.

மாடு வரும் குதிரை வரும்
வருமல்லவா வண்டி?
வரக்கண்டும் விலகாமல்
இருப்பவன் ஓர் நொண்டி.

ஆடுவரும் எருமை வரும்
முன்னே போனால் மிதிக்கும்!
அழுக்கு மூட்டைக் கழுதைவரும்
பின்னே போனால் உதைக்கும்.

மணி அடிக்கும் ஊது கேட்கும்
ஏமாறக் கூ டாது
வண்டி வந்தால் தீமை யல்ல
வா? செவிடா காது?

கல்லிருக்கும் முள்ளிருக்கும்
காலிற்பட்டால் தொல்லை.
கண்ணிருந்தும் காணாதவன்
போல முட்டாள் இல்லை.

புல்லிருக்கும் அதற்குள்ளே
பூச்சிபொட்டுக் கிடக்கும்.
புற்றிருக்கும் அதற்குள்ளே
பாம்பிருந்து கடிக்கும்!



புதுச்சேரி, தி. வ. ஆ. ககூஅகூ ஐப்பசி ககூ.

# புதுவைச் சட்டசபைக்குத் திருவாசகம் பாடியாயிற்று!

புதுவைச் சட்ட சபைக்குத் திருவாசகம் படித்தாய்விட்டது. அவ்வாறு அதை ஒழித்துக் கட்டிய அரசினர் செயல் சரியா? தப்பா? எனில் இந்த நிலையில் செய்யத்தக்கதை அரசினர் செய்தார்கள்.

எனவே நூற்றுக்கு நூறு சரி என்றே சொல்லுவோம்.

புதுவையின் சட்டசபைக் காங்கிரசுக் கட்சி ஒரு பொய்க்காலிக்குதிரை. அரசினர் கொடுத்த மூங்கிற்கால் கொண்டுதான் தப்புந் தவறுமாக ஆடிக்கொண்டிருந்தது.

புதுவையின் சட்டசபைக் காங்கிரசுக் கட்சியின் எதிர்க்கட்சி ஒரு மீன்கொத்தி. ஏரிக் குத்தகைக்காரன் எத்தனை கல் எறிந்தாலும் தன் முயற்சியில் அது தளர்ந்ததே இல்லை.

சட்ட சபைக் காங்கிரசுக் குழந்தைகள் கட்டுக் குலையாமல் இருக்கவேண்டுமே என்று அரசினர் இட்டுவந்தது இலஞ்சமல்ல. அது ஈகையின் பாற்படும். குழந்தைகளுக்கு ஆசை வந்தபோதெல்லாம் காசு தந்து கையமர்த்தினர். ஆயினும் கட்டுவலை பட்டென்று அறுந்தது. விட்டுப்பிரிந்த சில மீன்களைத் தட்டிக்கொண்டது மீன் கொத்தி!

இவ்வளவு விரைவில் இந்த நெல்லிக்காய் மூட்டையின் வாய்ப்புறம் கிழியும் என்று அரசினர் எதிர்பார்க்கவே இல்லை. நல்லவர்களும் இருப்பார்கள் என்று நம்பினார்கள் அரசினர். பிடிக்காத வீட்டில் சட்டசபைப் பெரிய நாற்காலிகள் எல்லாம் போய்ச் சேர்ந்ததற்குக் காங்கிரசுப் புலிகள்தாம் காரணம் என்பது புரிந்துவிட்டபோதிலும் இன்னும் ஓர் ஒட்டுப் பார்க்கலாம் என்று எண்ணினார்கள் அரசினர். அந்த எண்ணம் நகைப்புக்குரியது.

எத்திப்பிழைக்க ஓடின மீன்கள். அவைகளைக் கொத்திப்பிழைத்தது தனி மீன்கொத்தி! காரணம்: இருபக்கத்திலும் மூண்டெழுந்த தன்னலப் பசிவெறி!

சட்டத்தைப்பற்றி நினைக்கவும் அவர்கட்கு நேரமில்லை. சட்டசபை நாற்காலிகள் நிறைவு செய்யப்பட்டன. இந்தத் தேர்வு செல்லும் என்று சொன்னார் செல்லநாயக்கர்.

அரசினர் கடைசி ஆசையும் வீணாயிற்று. ஏன் வீணாயிற்று. ஆசைப்படக்கூடாத ஒன்றுக்கு அவர்கள் ஆசைப்பட்டார்கள்.

சட்டசபைக் காங்கிரசுக் கட்சிக்காரர்களே நீங்கள் அடுத்த மாதத்திலாவது அமைச்சர்கள் அறுவரைத் தேர்ந்தெடுங்கள்—இதுவல்லவா அரசினர் ஆசை!

முடியுமா? அமைச்சர் அவை அமைக்க முடியுமா? அவர்கள் சட்டசபை அமைக்க ஒருதவணை கொடுக்க வேண்டாமா? காங்கிரசு உறுப்பினர்களே, நீங்கள் அடுத்த நூற்றாண்டிலாவது அமைச்சர், ஆறுபேரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்.

என்று சொல்லியிருந்தாலும் சிறிது முன்னே பின்னேயாவது அவர்கள் அமைச்சரைத் தேர்ந்தெடுத்திருப்பார்கள். அதுவுமில்லை.

அமைச்சர் அவை உண்டாக்கப்படும் என்றுகூட அரசினர் எண்ணினார்களே, அதுதான் நமக்கு வியப்பை உண்டுபண்ணியது!

எப்படி அமைச்சர் அவை அமைக்க முடியும்? வெடுக்கென்று தூக்கிய மீன்களை விட்டுவிடுமா மீன்கொத்தி? விட்டாலும் கட்டு வலைக்கு உட்படுமா மீன்கள்? உட்பட்டாலும் ஒரு பொய்க்காலிக் குதிரையைத்தானே காண முடியும்? தன் கால்கொண்டு ஆடுமா? மரக்கால் உதவ இப்போது அரசினரிடம் என்னே இருக்கிறது? முன்பே முடித்திருக்கவேண்டும். இப்போதுதான் அரசினர் சட்டசபைக்குத் திருவாய் மலர்ந்தருளினர் திருவாசகம்!

## பொன்னுன புதுவை தன்னையேதான் நம்ப வேண்டும்!

தூங்கியவரைக்கும் பிழைசெய்து வந்த புதுவையே! நீ, இன்னும் தூங்குவது இறப்பதாகும்.

புதுவை, அசம்புலி, அசமும் புலியுமாகவே இருந்ததால், கலைத்துத் துறத்தினர், அரசினர்!

(அசம்-ஆடு)

பொன்னுன புதுவையே! உனக்கும் தெரியும். அந்தக் கட்சியும் இந்தக் கட்சியும் எப்படி என்று.

தன்கைதான் தனக்குத் தருங்கை. பிறர்கை இடிக்கும் உலக்கை.

வணிகர்களை எழுப்பு! உன் வாழாத மக்களை வாழத் தூண்டு. அஞ்சும் அலுவல்காரருக்கு உணர்ச்சியை ஊட்டு. பழம்போர் வீரர்களைக் காட்டிக் கொடுப்பாரை நம்பவேண்டாம் என்று இடித்து இடித்துக் கூறு! பணம் பணம் என்று மகிழ்ச்சியில் தூங்குகின்றவர்கள் நாளைக்குப் பிணம் பிணம் என்று அழவேண்டிய நிலை வரும் என்று எச்சரிக்கை செய்! ஏழை மக்களை எழுப்பு!

அருமைப் புதுவையே,

இருட்டுக்குகையில் எரிமூட்டப்பட்டுவிட்டது! வெளியில் வரட்டும் வேங்கைக் கூட்டம்.

ஒன்றுகூடி பொதுநலம்காக்க ஒருகுழுவை இன்றே தேர்ந்தெடுக்கவேண்டும். அந்தக் குழு நல்லவர் கழகமாகத் திகழவேண்டும்.

எவர்க்கும் கட்டுப்படாததாய் இருக்க வேண்டும்.

இதோ வரப்போகின்றது புதுவைச் சட்டசபைக்குப் பொதுத்தேர்தல் ஒவ்வொரு தொகுதிக்கும் நல்லவர் கழகம் ஆளை நிறுத்தி வெற்றிபெறச் செய்யவேண்டும்.

பொன்னுன புதுவையே! நீ நிற்கும் இடம் உயர்ந்தது அதிலிருந்து உன்னை இழுத்துத்தள்ள எவனும் நினைக்கக்கூடாது.

கண்ணுன புதுவையே! உன் வரலாறு மண்ணோடு மண்ணுகி விடக்கூடாது தட்டான் சாவடியைப் புதுவை நகராக்கப் பாடுபடவேண்டும். மாருகப் புதுவை தட்டான் சாவடியாகிவிடக் கூடாது.

## காரை அரிசி!

காரைக்காலின் அரிசி, நெல் புதுவைக்கே (காரைக்கு வேண்டியதுபோக) அனுப்பப்படவேண்டும். மாருக அயலார்க்கு ஆதாயம் கருதி அனுப்பக்கூடாது என்று நாம் எழுதியபடியே நம் அரசினர் தலைவர் தக்க ஏற்பாடுசெய்யத் தொடங்கியுள்ளார் என்று கேள்விப்படுகின்றோம்.

அந்த நல்ல பணியைச் சற்று விரைவில் செய்துமுடித்தால் மிக்க நலமாயிருக்கும் என்று கேட்டுக் கொள்ளுகினறோம.

---

## விற்பனையாளர்க்கு...!

சில விற்பனையாளர்கள் நமக்கனுப்பவேண்டிய பட்டியல் தொகையை இன்னும் அனுப்பவில்லை.

இந்த அறிவிப்பைக் கண்டும் அவர்கள் பணம் அனுப்பாவிடில் அடுத்த இதழ் முதல் "குயில்" அனுப்புவது நிறுத்தப்படும்.

---

# பிசிராந்தையார்

## தொடர் நாடகம்

அரசர்: தூயனே, தச்சுப்புலவரால் பச்சைக்கிளியின் உருவத்தை மரத்தில்செதுக்கி வைத்துள்ளோம். அவள் தானு பச்சைக்கிளி என்பதை நேரில் பார்த்துச் சொல்லவேண்டும் அவளில்லை என்ருல் அதையும் சொல்லி விடலாம்.

*(திரை விலகுகின்றது உருவத்தைப் பார்த்துத் தூயன் தலை குனிகின்ருன்.)*

அரசன்: மரப்பாவை!

தூயன்: ஆ! - அரசர் பெருமானே இது அவள் உருவமைப்பே! *(உற்றுப்பார்க்கின்ருன்)* உயிரிழந்தாய்! என்னுல்!

பிசிராந்: அது பாவை! மறந்து விடுகின்றீரே!

தூயன்: *(அழுதுகொண்டே)* உயிரிழந்தாள் அவள்! என்னுல்...

*(அருகில் இருக்கும் போர்வீரனை நோக்கி)*

அந்தக் கத்தி வேண்டும்! *(போர்வீரன் கை மறுக்கிறது)* அரசர் பெருமானே மனத்தொல்லை தாங்கவில்லை என்னை மாய்த்துவிடுங்கள்! *(தன் கண்களைக் கையால் மூடிக்கொள்ளுகின்ருன்)*

பிசிராந்: தூயனே, உன் வஞ்சச் செயலால் பச்சைக்கிளிபட்ட பாட்டைப் பார் உன் கண்நேர்.

*(திரை விலகுகின்றது. சிதைந்த உடல் காட்சியளிக்கின்றது.)*

தூயன்: ஐயோ!... *(தலையில் அடித்துக் கொண்டு)* கற்புக்கரசி நீ! உன் கற்பில் ஐயப் படும்படி செய்தேன் நான். மனந்தவறி நான் அப்படிச் செய்தேன் என்ருலும் இப்படிச் செய்யலாமா ஆராயாமல் அந்தப்பாவி! ஆயினும் உடல் துடிக்க உயிர் துடிக்க இவ்வாறு குத்தியவன் அவனல்லன் நான்!

அவையத்தாரே நான் சாகவேண்டும். என் சின்ன உயிர் இத்தனைபெரும் துன்பத்தைச் சுமக்காது.

பிசிராந்: துயனே! சற்றே விலகி நில். மான் வளவனையும் உன்னையும் எதிரெதிர் வைத்து வாய்ப்பிறப்பைக் கேட்கவேண்டும்.

*(விரர்கள் தூயனை அழைத்துச் செல்லுகிருர்கள். பிசிராந்தையார் படைத்தலைவனை அருகில் அழைத்து ஏதோ காதில் முணுமுணுக்கிருர். அவன் செல்லுகின்ருன்.)*

அரசன்: பாவேந்தரே, இன்னும் அவர்கட்குத் தண்டனை வேண்டுமா? அவர்கள் அடைந்துள்ளதுன்பம் போதாதென்ரு எண்ணுகின்றீர்கள்?

பிசிராந்: ஓர் உள்ளத்தின்மேல் படை எடுத்த தீயஎண்ணங்கள், எவ்வாறு பின்வாங்குகின்றன என்பதைப் பார்க்கவேண்டாமா?

அரசன்: வந்து சேரட்டும் இருவரும்.

*(தூயனும், மான்வளவனும் வருகின்ருர்கள். திரைகள் இரண்டும் விலகுகின்றன தூயனும் மான்வளனும் முகத்தை மூடிக் கொள்ளுகிருர்கள்.)*

பிசிராந்: கண்ணைத் திறவுங்கள்! உற்றுப் பாருங்கள்!

வாழப் பிறந்தவளாயிற்றே அன்பர்களே! சாகப் பிறந்தவளா அவள்? வட்டில் அமிழ்தாயிற்றே கொட்டிக் கவிழ்க்கலாமா! எத்தால் குறைந்தாள்? எக்குற்றம்தான் புரிந்தாள்? வைத்து வைத்துப் பார்க்கும் வடிவழகுக்குக் குத்தும் வெட்டுமா அன்பளிப்பு? பாண்டிய நாட்டின் நடைமுறைக் குறிப்பில் யாண்டும் இத்தகைய கொடிய வரலாறு காண்டல் உண்டா?

தூக்கிய கத்தி அவனின் துணுக்குற்ற விழிகண்டும் தாக்கத் துணிந்ததுண்டா?

ஏந்திய கொடுவாள்கண்ட ஏந்திழையின் மாந்தளிர் மேனி நடுங்கக்கண்டும் மாய்ந்திடச் செய்ய மனமும் வருமா?

காதல் இருவர் கருத்து ஒருமித்து வாழ்வதைக்கண்டு மகிழவேண்டுமா அவள் சாதலைக் கண்டு மகிழவேண்டுமா துயனே எண்ணிப்பார்!

**தூயன்:** ஐயோ ஐயா நான் மகிழ வில்லை என்னை நான் இகழுகின்றேன்.

**பிசிராந்:** நாளெல்லாம் அவள் நடத்தையில் நலம் கண்ட நீ. கோள் சொன்னது கொண்டு ஆராயாமல் வாள் கொண்டு மங்கையை மாய்த்தது மடமை இல்லையா? மான்வளவனே.

*(அங்கு நடுவில் ஓர் பெட்டிமேல் வாள் வைக்கப் பட்டிருக்கிறது அதை உற்றுப் பார்க்கிறான் தூயன். அதை அறிந்து கொள்ளுகின்றார் பிசிராந்தையார்)*

**பிசிராந்:** தற்கொலை செய்து கொள்வது பெருங் குற்றம்! நீங்கள் செய்த குற்றத்திற்குத் தண்டனை கேட்பது மெய்தானா! மனமாரச் சொல்லுகின்றீர்களா, மேலுக்கா?

**தூயன்:**
**மான்வளவன்:** } மனமாரச் சொல்லுகின்றோம்.

**தூயன்:** சாகாதிருக்கும் ஒவ்வொரு கணமும் நான் தணியாத தணலில் துடிக்கின்றேன் ஐயா (*உடல் துவளல் தலை தொங்கல்.*)

**மான்வள:** இருக்கும் வரைக்கும் துன்பம்! இறந்தால் தான் இன்பம்

*(சோர்ந்து உட்கார்ந்து விடுகின்றான்)*

**பிசிராந்:** நம் தாய் நாடு நல்லதொரு தமிழ் மகளை இழந்து விட்டது. யார் காரணம்!

**தூயன்:** *(உடனே)* நான்!

**பிசிராந்:** என்ன தண்டனை வேண்டும்?

**தூயன்:** சாவு வேண்டும்.

**பிசிராந்:** அன்பு மனைவியை இழந்த மான் வளவனைக்கேள்.

**மான்வள:** ஐயா கொலைசெய்தவன் நான் அல்லவா?

**பிசிராந்:** என்ன தண்டனை வேண்டும்

**மான்வள:** சாவு வேண்டும்.

**பிசிராந்:** இரங்கி அழும் தூயனைக் கேள்.

**தூயன்:** *(கத்தியை எடுத்து மான்வளவனெதிர் நீட்டி)* படுகொலை செய்யத் தூண்டிய பாவி நான்! நிகழ்த்திய தீச்செயலை என் நெஞ்சு தாங்கவில்லை இன்பமான சாவை எனக்குக் கொடுக்க வேண்டும்.

**மான்வள:** *[வாங்க மறுத்து]* நானா வாழத் தகுந்தவன்! நீரா சாகத்தகுந்தவர்! என் உள்ளம் கொடியது. அதைப் பார்க்க முடிந்தால் பார்க்கட்டும் இந்த உலகம்! பார்க்க முடியாது. நல்லாரை எண்ணித் தவங்கிடக்கும் நானிலமே! கேள்!

தூக்கிய வாளை முதலில் அவள் தோளில் பாய்ச்சினேன் அவள் அலற வில்லை. உடலை ஒருக்கணித்தாள்; முதுகின் ஓரத்தில் குத்தினேன்; அவள் ஓலமிடவில்லை துடையில் குத்தினேன்; துடிக்கவில்லை. மேடிட்டிருந்த வயிற்றை நோக்கியது என் கத்தி. வயிற்றிற் பிள்ளை வயிற்றிற்பிள்ளை என்று வாய்விட்டு அலறி வயிற்றைக் கையிட்டுக் காக்கப் பறந்தாள். என் இருப்பு நெஞ்சம் கருப்பையிற் குழந்தையும் துண்டாகும்படி கத்தியைப் பாய்ச்சியது.

---

## உறுப்பினராக...

| கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| தனி இதழ் | 13 காசு | 16 காசு |
| ஓராண்டு | ரூ. 6—75, | ரூ. 8—50. |
| ஆறு மாதம் | ரூ. 3—37. | ரூ. 4—50. |
| வாழ்நாள் | ரூ. 100. | |

தனி இதழ் வேண்டுவோர் 0-15 (பதினைந்து காசு) அஞ்சல் தலைகள் அனுப்புக.

---

# வந்தவர் மொழியா? செந்தமிழ்ச் செல்வமா?

## வினயம்

இது தூய தமிழ்ச்சொல். வினயம் என்பதையே இவ்வாறு திரித்து ஆண்டனர் வடவர்.

வினை என்பது அதன் பயனுக்கு, வினையம் என ஈறு திரிந்து ஆகுபெயர் ஆயிற்று.

வினை இரண்டு: நல்வினை, தீவினை! எனவே வினையம் இரண்டு: நல்வினையம் தீவினையம். ஆயினும் வினையம் என்பது நல்வினையம் தீவினையம் என ஏற்றவாறு பொருள்கொள்ள வேண்டும்.

நல் வினையம் என்ற இடத்தில் வரும் வினையம் வணக்கம், அடக்கம், அறிவு என்ற பொருள்களைத் தந்து நிற்கும்.

தீவினையம் என்ற இடத்தில்வரும் வினையம் அவற்றிற்கு மாறான பொருளைத் தந்து நிற்கும்.

ஆயினும் புராணகாலப் புயலில் சிக்குண்ட புலவர்கள் நல்ல பொருளில் எடுத்தாளும்போது இச் சொல்லை வினயம் என்றும் தீயபொருளில் கையாளும்போது இச் சொல்லை வினையம் என்றும் குறிக்கலாயினர்.

அதனால் அண்மைக் காலத்து அகர வரிசை நூற்களில், வினயம், – வணக்கம், அடக்கம் அறிவு என்று பொருள் காட்டினர் வினையம் – தீய வினைப்பயன் என்று கொண்டனர் புலவர்.

கம்பராமாயணச் செய்யுள் :

**இளையநற் காதை முற்றும் எழுதினோர் வியந்தோர்கள்**
**அனையதுதன்னைச் சொல்வோர்க்கு அரும்பொருள்**
**[கொடுத்துக் கேட்டோர்**
**கனைகடற் புடவிமீதே காவலர்க்குஅரசாய் வாழ்ந்து**
**வினையம் அதுஅறுத்து மேலாம் விண்ணவன்**
**[பதத்திற்சேர்வார்.**

என்பதில் வினையம் காண்க.

எனவே வினயம் வினையமே தூய தமிழ்ச் சொல்லே.

## கவி

இது கபி என்றதின் சிதைவானால் குரங்கு என்று பொருள்படும். அப்போது அது வட சொல் என்றால் நாம் ஏற்றுக்கொள்ளத் தடையில்லை. பா என்னும் பொருளைத் தரும்போது அது (கவி) தூய தமிழ்ச்சொல்லே யாகும்.

கவிதல் என்பது தல் இறுதிநிலை பெற்ற தொழிற்பெயர். கவிகை எனும்போது அது கை இறுதிநிலை பெற்ற தொழிற்பெயர். கவிதை என்பதில் அதுபோலவே தை இறுதிநிலை என்க. நடத்தை என்பதிற்போல. எனவே கவிதல், கவிகை, கவிதை, இத் தொழிற்பெயர்கள் கவி என முதனிலைத் தொழிற்பெயராக வருவது உண்டு. இது பெருவழக்கும் ஆகும்.

இனிக் கவி என்றால் மனம் ஒருபொருளில் கவிவது; பா என்க. கவி என்பது பாட்டுக்குத் தொழிலாகு பெயர் ஆயிற்று.

கவிதா என்கின்றார்களே வடவர் எனில், அது வடவர் இயல்பான செயல் என விடுக்க!

கவிஞனின் உள்ளத்தில் உருவான நிலையில் வைத்து அதைக் கவி என்றான் தமிழன். அது வெளிப்பட்டுப் பரவி நடக்கும் (பரவி) நிலையில் அதைப் பா என்றான்!

சடகோபர் அந்தாதி 7.

கவிப்பா அமுதம் இசையின் கறியொடு கண்ணன்
[உண்ணக்
குவிப்பான் குருகைப் பிரான்சட கோபன் குமரி
[கொண்கன்
புவிப்பா வலர்தம் பிரான்திருவாய் மொழி பூசுரர்தம்
செவிப்பால் நுழைந்து புக்கு உள்ளத்திலே நின்று
[தித்திக்குமே.

என்றதில் நோக்குக.

இதில் கவி என்றது என்ன பொருளில் அமைந்தது! மனம் கவிதலால் உண்டான பா எனப் படவில்லையா? எனவே கவி தனியே நின்று ஆகுபெயராய்ப் பாவை உணர்த்துவதில் வியப்பென்ன ?

கவி என்ற தூய தமிழ்ச் சொல்லும், அது பாவை உணர்த்த வேண்டியதற்கான தமிழ்ச் சட்டமும் இற்றைக்கு 5000 ஆண்டுகளுக்கு

# நச்சினர்க்கு நஞ்சா? அமிழ்தா?

## கயல்விழி

செந்தமிழ் நன்னாட்டுச் சீர்சால் அரச மரபொன்று இருபுனலும் வாய்ந்தமலையும், வல்லரணும்பெற்று, அறங்கொண்டுமறம்நீக்கி, குடியோம்பி மடியகற்றி, குறைவிலா நிறைவாய், கோதிலா அமுதாய், கொழுஞ்சுடர்க் குன்றனைய ஒளியுற்று எழில் பெற்றுத் திகழ்ந்திருப்பதைக் கண்டு குறும்புச்செயல் கொண்ட சில பார்ப்பன மாக்கள், கார்பெற்ற தோகையோ? கண் பெற்ற வாள் நுதலோ? நீர் பெற்றுயர்ந்த நிறைபுலமோ எனும்படி களிகொண்டு துள்ளியெழுந்து.

"ஆ! இவ்வளவு சிறந்த அரசமரபுக்கு இழுக்கேற்றி அவர்களது ஒப்பிலா நிலைக்குக் களங்கம் கற்பித்து ஒடுக்கி அழித்தல் வேண்டும். அன்றேல் அந்த அரசமரபையே ஆரிய அரசமரபென்று கூறி இந்தத் தமிழ் அரசமரபின் பெருமையைத் தமதாக்கிக் கொள்ளவேண்டும்" என நினைத்து அதைச் செயலாற்ற உரை காண்கின்றோம் என்று கூறியும் இலக்கியத்துள் நுழைந்து தமிழ் மரபையும் ஆரியமரபு என்று கூறி உரை செய்திருக்கின்றனர்.

இது போன்றவைகளைக் கண்டு கண்டு மனம் வெதும்பிய மறைமலையடிகள் வெளியிட்டிருக்கும் கீழ்வரும் உரையை எண்ணுக.

"ஆரியப் பார்ப்பனர் தமிழையுந் தமிழர் நூல்களையுந் தமிழரையுந் தமிழ்ப் பெரியாரையுந் தமிழ்த் தெய்வத்தையுந் தாழ்வுபடுத்தி வருஞ் சூழ்ச்சிகளை எல்லாம் ஈண்டுரைக்கப் புகின் இது மிக விரியும். பொதுவாய்த் தமிழ்த் தொடர்புடைய எதனையும் இகழ்ந்த தொதுக்குதலே இவர்தங் கட்டுப்பாடு தாம் அங்ஙனம் ஒதுக்குதற்கு ஏலாமல் ஏற்பதற்குரிய மிகச் சிறந்தது ஏதேனும் ஒன்றைத் தமிழிற் கண்டால் உடனே அஃது ஆரியராகிய தம்மவரிடமிருந்து வந்ததென நாட்டுவதற்குத் தக்க ஏற்பாடுகளையெல்லாம் (நச்சினர்க்கினியர் காப்பியருக்கும் இன்னும் பிறருக்கும் கட்டிய கதைபோன்று) எப்படியோ (அகச்சான்று உண்டோ? இல்லையோ? அதுபற்றிக் கவலையில்லாமல்) செய்து வைப்பர்!

(வேளாளர் நாகரிகம்-பக்கம் 31)

தொண்டையர் குடி என்பது பழைய சோழர் மரபைக் குறிக்கும். குடிகளுக்குத் தொண்டு செய்தலையே நோக்காகக் கொண்டு தொண்டு செய்தகுடி தொண்டையர் குடி ஆயிற்றென்க.

**தொண்டையர்:–**

தொள்– தொய்வு - தளர்ச்சி (தேவநேயப் பாவாணர் – முதல் தாய்மொழி)

கடல்கோளிலும் பிற இயற்கை இன்னல்களிலும் சிக்கித் தளர்வுற்று வீழ்ந்த நிலையில் திருமாவளவன் முதலிய சோழப் பேரரசர்கள் திறனும் தெம்பும் உரனும் ஊக்கமும் கொண்டு ஒல்லும் வகையெல்லாம் முயன்று தன் குடியை ஓம்பிக் காத்திருக்கின்றனர். ஆகவே குடிமக்கள் இவர்களைத் தொண்டையர் என்று கூறியதில் வியப்பில்லை.

கிள்ளி, வளவன், சென்னி என்ற பெயர்களில் நுழைந்து நோக்கிப் பொருள் காணின் காடு கெடுத்து நடாக்கி வளம்பல செய்த தொண்டு நிலை தெரியவரும். (கிள்ளி - கிள்ளுதல், நிலத்தைத் தோண்டுதல். வளவன் வளஞ் செய்தவன் வளவன் சென்னி – தலைவன்) இவ்வாறு வரும் நலங்கிள்ளி பெருங்கிள்ளி, கோப்பெரு நற்கிள்ளி என்ற பெயர்களைக் கண்டு ஆய்ந்து உணர்ந்து கொள்க.

---

முன்னரே நம்மிடம் உண்டு! ஆட்சியில் உண்டு. அதுபோல இதை வடவர் 5000 ஆண்டுகளின் முன்னே ஏற்பட்டிருந்தால் அந்தக் காரணத்தைக் காட்டி இது வடசொல்லேதான் என்று மறுக்கட்டுமே! தமிழர் தம் தமிழ் உள்ளத்தை வடவரின் நச்சில் துவைத்துக் கொண்டு, தமிழ்நாட்டில் தமிழில் உள்ள சொற்களிலெல்லாம் ஐயப்பாடுறுவானேன்? நாவலந்தீவு தமிழருடையது, அங்கு இயற்கை முறையில் முதற்காலத்திலே இருந்தது தமிழ். ஆரியர் வந்தவர். வந்தபின்தான் அவர்களின் மொழியைத் தமிழாற் பெருக்கினர். ஆரியர் வரும்போது அவர்கட்குச் சில சொற்களே தெரியும்! அவர்கட்கு நூற்களும் ஏற்பட்டன என்றால் தமிழாலேயே! சமஸ்கிருதம் என்பது சேர்த்துப்பொறுக்கிச் செம்மைப்படுத்தப்பட்ட ஒரு கூட்டுககறி! தமிழ் அப்படியா? கருத வேண்டும். எனவே கவி தூய தமிழ்ச்சொல்லே என்று கடைப்பிடிக்க!

—ஐ

இதை உறுதிப் படுத்தக் கீழ்வரும் பெரும் பாணாற்றுப் படையின் அடிகளே போதிய சான்றாகும்.

மலர்தலை உலகத்து மன்னுயிர் காக்கும்
முரசுமுழங்கு தானை மூவ ருள்ளும்
இலங்குநீர்ப் பரப்பின் வளைமீக் கூறும்
வலம்புரி யன்ன வசைநீங்கு சிறப்பின்
அல்லது கடிந்த அறம்புரி செங்கோல்
பல்வேற் றிரையர் படர்குவி ராயின்

– பெரும்பாண் (32-37)

சோழர்களுக்கு உரிய இத் தொண்டையர் என்ற சொல் மிகப் பழங்காலத்திலேயே அவர்கட்கு வழங்கி வந்திருக்கிறது என்பதைக் கீழ்க்கண்ட எடுத்துக் காட்டுகள் நன்கு தெரிவிக்கும்.

1. வினைநவில் யானை விறற்போர்த் தொண்டையர் [அகம் 213]

2. தொண்டையோர் மருக [பெரும்பாண் 454]

3. ஞாயிற் றொளியான் மதிநிழற்றே தொண்டையார் கோவிற் றிருந்த குடை [பழம் மேற்கோள் பாடல்]

4. சோழ னுறந்தைக் கரும்பினிது தொண்டைமான் கச்சியுட் காக்கை கரிது. [பழம் மேற்கோள் பாடல்]

எனவே கடல் மூலம் வாணிபம் பெருக்கியும் நீர் நிலைகள் அமைத்தும், காவிரிக்குக் கரைகட்டியும் குடிகளுக்குத் தொண்டு செய்த காரணத்தால் தொண்டையர் என்ற சொல் சோழரைக் குறிப்பதுடன் பழங் காலந் தொட்டே அச்சொல் பயிலப் பட்டு வந்திருக்கிறது என்பதை நிலை நிறுத்தி மேற் செல்வோம்.

இதை விடுத்து தொண்டையர் குடி என்பது வடநாட்டுத் துரோணர் மரபைச் சேர்ந்தது என்று கூறி எக்காளமிட்டு நிற்கிறார் ரா. ராகவையங்கார் அவர்கள்.

நச்சினார்க்கினியர் தமிழ் நிலத்தில் விதைத்துச் சென்ற நச்சுவிதைக்கு நீர் பாய்ச்சிப் பேணி வளர்க்கும் மற்றொரு நஞ்சு இவர். இனம் இனத்தை நாடியதில் வியப்பல்லவே.

பொய்யறியா வாய்மொழியாற் புகழ் நிறைந்த நன்மாந்தரொடு நல்லூழி அடிப்படரப் பல் வெள்ளம் மீக்கூற உலகம் ஆண்ட தண்டமிழ் நன்னாட்டு முடியுடைவேந்தர் மூவருள்ளும் தொடி விளங்கு தடக்கைச் சோழர் குலத்து உதித்தோரது அறனும், மறனும், ஆற்றலும், அவர்தம் குடியும் கூழின் பெருக்கமும், காடுகொன்று நாடாக்கிக் குளந் தொட்டு வளம்பெருக்கிய திறனும், காலைக்கதிரவனும் மாலை மதியமும் போன்று ஒப்பாரும் மிக்காரும் இன்றி உயர்ந்தோங்கி ஒருதனி நிலையில் நின்ற அவர்தம் ஆற்றலும் ஆகிய அனைத்தையும் செந்தமிழ் நன்னாட்டுச் சீர்சால் இலக்கியங்களில் சிறப்புறக் காண்கின்றோம்.

இவ்வளவு சிறப்பும் ஒருங்கமையப்பெற்ற சோழர்குலத்தில் தோன்றிய இளந்திரையன் பத்துப் பாட்டுள்ஒன்றாகிய பெரும்பாணாற்றுக்குத்தலைவனும் கிள்ளிவளவனது மகனும் ஆவான்.

இத் தொண்டைமான் இளந்திரையனையும் அவனது மரபையும் "திரைதரு மரபின் உரவோன்" (பெரும்பாண் 30) என்ற சொல்லால் பெரும் பாணாற்றுப்படை குறிக்கிறது.

இத் தொடருக்குத் திரைசெறிந்த கடல் மூலம் வாணிபம் நடாத்தி அதன் மூலம் செல்வத்தைத் தன் நாட்டிற்குத் தந்துவரும் சோழர் மரபெனக் கொள்ளுதல் சாலப் பொருந்தும்.

இத் தொடருக்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர் "கடலின் திரைகொண்டு வந்து ஏறவிட்ட மரபு" என்று கூறிக் கட்டுக்கதை ஒன்றையும் கூறியிருக்கிறார்.

"நாகப்பட்டினத்துச் சோழன் பிலத்துவாரத்தால் நாகலோகத்தே சென்று நாககன்னியைப் புணர்ந்த காலத்து அவள் யான்பெற்ற புதல்வனை என்செய்வேன் என்ற பொழுது தொண்டையை அடையாளமாகக் காட்டிக் கடலிலேவிட அவன் வந்து கரையேறின் அவற்கு யான் அரசவுரிமை எய்துவித்து நாடாட்சி கொடுப்பவென்று அவன் கூற அவளும் புதல்வனை அங்ஙனம் வரவிடத் திரை தருதலின் திரையன் என்று பெயர்பெற்ற கதை கூறினார்" என்று கூறுகிறார். (பத்துப்பாட்டு-நச்சினார்க்கினியருரை - பக்கம் 214)

தொண்டையர் மரபு கடல்வழி வந்தது என்றும் திரைகொண்டுவந்து ஏறவிட்ட மரபு என்றும் கூறிய இவரது கூற்று அடியற்ற நெடுமரமாவதைச் சிறிது ஆய்வோம்.

பொதுவாகச் சோழர் குலத்துத் தோன்றிய அரசர்கள் நாவாயோட்டி நாடுகளை வென்று அங்கு வாணிகம் நடத்தி அந்த வணிகத்தின் மூலம் பொன்னும் மணியும் ஆகிய இன்னபிற பொருள்

களையும் கொணர்ந்து செல்வச் செழுமை ஆக்கி வாழ்வை வளம் படுத்தினர்.

திருமாவளவனுக்குப் பிறகு கடல்கோளாலும் இன்ன பிற இயற்கை இடையூறுகளாலும் கடல் வாணிபம் சிறிது தடைப்பட்டிருக்க வேண்டும். இளந்திரையன் ஆட்சிக்காலத்தில் மக்கள் அமைதியாக வாழத் தொடங்கியபொழுது கடல் வாணிபம் மீண்டும் சிறந்தோங்கி ஒளிர்வுபெற்று நிற்கலாயிற்று. அலைகடல் சென்று வாணிபம்நடத்த இவன் மக்களை ஊக்கியதால் அலைகடலின் பெயரே இவனுக்காகித் திரையன் என வழங்கலாயிற்றென்க.

மேலும் சோழர் குலத்துத் தோன்றிய பேரரசர்களைச் சிறப்பித்த புலவர்கள்அனைவரும் இவர்களது கடலாட்சியை நன்குணர்ந்து அவர்களுக்கு அடை கொடுத்துப் பாடிய அடிகளைக் இங்குக் காணுதல் ஏற்புடைத்து.

சோழன் கரிகாற் பெருவளத்தானைப் பாடிய வெண்ணிக் குயத்தியார்

"நளியிரு முந்நீர் நாவா போட்டி
வளி தொழிலாண்ட வுரவோன் மருக"

என்று கூறுகிறார். (புறம் – 66)

"நீர் செறிந்த பெரிய கடலின்கண் காற்றை ஏவி நாவாய் ஓட்டிய மரபில் தோன்றியவனே" என்பது இதன் பொருள்.

எனவே மேற்கண்ட வெண்ணிக் குயத்தியார் தொடரையும் "திரைதரு மரபின் உரவோன்" என்ற இத் தொடரையும் ஒப்புநோக்கி உண்மை காணும் பொழுது திரைதரு மரபு என்பதற்கு நாவாய் ஓட்டி நாட்டுக்குப் புகழும் பொருளும் கொணர்ந்த மரபு என்றுதான் பொருள் கொள்ளுதல் சாலுமேயொழிய குழந்தையைத் திரைகொண்டு வந்த ஏறவிட்ட மரபு என்று கொள்ளுதல் சாலாது.

சோழர்களது கடலாட்சியின் ஒப்பிலா நிலை பற்றித் தெரிய இளங்கோவடிகள் கூறிச்சென்ற கீழ் வரும் அவர் மொழிகண்டு தெளிக.

1. விங்கு நீர் வேலி யுலகிற் கவன் குலத்தோடு (மங்கல வாழ்த்துப் பாடல் II)
2. கடல் பஃறுரமும் (கடலாடு காதை 153)
3. கடல் புக்கு உயிர் கொன்று வாழ்வர் நின்ஐயர் (கானல்வரி – 17)
4. வரு கலன்கள் நோக்கி (வஞ்சினமாலை - 16)
5. மா நாய்கன் (மங்கல வாழ்த்துப் பாடல் 23)

(நாய்கன் என்பவன் நாவாயோட்டிக் கடல் வாணிபம் செய்பவன். மா நாய்கன் என்றது அவ்வாறு வாணிபம் செய்பவர்கட்குத் தலைவன் எனக் கொள்க).

மேலும் பட்டினப்பாலை, பெரும்பாணாற்றுப் படை ஆகியவற்றை இயற்றிய உருத்திரங் கண்ணனார் அவர்களும்

1. மலையவும் கடலவும் மாண்பயன் தரூஉம்
அரும்பொருள் அருத்தும் திருந்துதொடை
-நோன்றாள்

(பெரும்பாண் 67-68) என்றும்

2. நீரின் வந்த நிமிர்ப்பலப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
ஈழத் துணவும் காழகத் தாக்கமும்
நீர்நாப் பண்ணும் நிலத்தின் மேலும்

(பட்டினப் பாலை 185, 186, 191, 194) என்றும் கூறியிருத்தலான் சோழர்களது கடல் வாணிகத்தின் ஏற்றத்தையும் பெற்றியையும் இனிதுணர்ந்து கொள்க.

எனவே மேற்கண்ட வெண்ணிக் குயத்தியார், இளங்கோவடிகள், கடியலூர் உருத்திரங் கண்ணனார் ஆகியவர்கள் சோழர்களின் கடலாட்சியைக் குறித்துச்சென்ற தொடர்களைக் கொண்டு திரைதரு மரபு என்பது "திரைதவழும் அலையிடத்து நாவாய் ஓட்டி பொருளும் பிறவும் நாட்டிற்குத் தந்த அரச மரபு" என்பதைக் குறிக்கிறது எனக் கண்டோம்.

முந்நீர் வண்ணன் (பெரும்பாண் 30) என்னுந் தொடர் பெரும்பாணாற்றுப் படையில் பயிலப்படுகிறது. இந்த முந்நீர் வண்ணன் என்பதற்குத் திருமால் என்று பொருள்கூறி அத்துடன் நிறுத்தாமல், அந்தத் திருமால் என்பதற்கு இராமன் என்று பொருள்கூறி சோழ மரபையே பின்னிருந்து அம் பெய்திய பெருவீரனின் (இராமனின்) குடியில் கூறி முடித்த இந்த நச்சினார்க்கினியர் நஞ்சா? அமிழ்தா?

திரை தவழ்ந்த கடலிடத்து நாவாய் ஓட்டி நாட்டுக்கு நலம்பயக்கும் பொருள்பல கொணர்ந்து செழுமையாக்கிய திரைதரு மரபு என்பதை விடுத்து சோழர் மரபை ஏதோ கடலிடத்து அனாதையாக வந்த குலமென இழித்துக்கூறிய நச்சினார்க்கினியர் நஞ்சா? அமிழ்தா?

# குயிலே பாடு

கரந்தை, கதிரவன்

தென்னாட்டின் அறியாமை இருளைப் போக்கி,
தெளிவுதரு அறிவென்னும் ஒளியைக் காட்டி
இந்நாட்டின் விடுதலையே வாழ்வாய்க் கொண்டே
இரவென்றும் பாராது உழைப்பு மேவப்
பொன்னாடு மாற்றார்க்கே அடிமை யாகிப்
பொலிவிழத்தல் கூடாதே என்று நாளும்
இன்னல்தரும் ஆரியத்தைச் சாடும் தந்தை
ஈ. வெ. ரா. பெரியாரை குயிலே பாடு!
பாரினிலே காணாத சாதி யென்னும்
பண்பற்ற ஒழுங்கீனம் இந்த நாட்டில்
வேராக நிற்கும்நிலை வீழ; தந்தை
வீரர்கள் சிறைசென்ற நேர்மை கண்டு
ஆரியத்தின் முன்னேற்றக் கழக மந்தோ
அடைகின்ற அவமான அவலங் கேட்டே
கூரியதோர் சொல்லம்பு பாய்ச்சி நீயும்
கொள்கைவழி நீங்காது குயிலே பாடு!

---

ஒழுக்கத்திற் சிறந்த சோழனை யாரோ நாக நாட்டுப் பெண்ணுடன் புணர்ந்ததாகக் கூறி சோழ அரச மரபுக்கு மாசு கற்பித்த நச்சினார்க்கினியர் நஞ்சா? அமிழ்தா?

இவை போன்று எழுதிய நச்சினார்க்கினியர் உரையைக்கண்டு கலங்கிய ச. சோமசுந்தர பாரதியார் அவர்கள் இவரைப்பற்றி எழுதிய கீழ்வரும் பொருளுரையை எண்ணுக.

"நச்சினார்க்கினியர் பரந்த நூற்பயிற்சி நிறைந்த உரைகாரருள் சிறந்த அடியார்க்கு நல்லாரைக் கல்வியால் ஒப்பாராயினும் அடியார்க்கு நல்லார் போல் அடக்கமின்றி எப்போதும் யாவரும் கூறுப் புதியன புனையும் [அதாவது தொல்காப்பியரைத் திரண தூமாக்கினியாக்கியது, இளந்திரயனை இராமன் குடியாக்கியது போன்ற புனைவுகள்] பெருமித மிகுந்த நச்சினார்க்கினியர் தம் கூற்றே எதையும் நிறுவப்போதிய ஆதரவாமென ஒதுவ தல்லாமல் பிற சான்றும் வேண்டும் என எண்ண வொண்ணு இயல்பினை உடையவர்."

(பழந்தமிழ்நாடு பக். 35)

நச்சினார்க்கினியரின் பொருந்தா உரையைக் கண்டு பேராசிரியர் டாக்டர், மு. வ. அவர்கள் வெளியிருக்கும் கீழ்வரும் உரையை நோக்குக.

... ... Nachinarkkiniar sometimes seems to mislead the reader through his unnecessarily indirect and circumlocutory methods of exposition. (The Treatment of Nature in Sangam Literature)

# கம்ப ராமாயணத்தில் "ஆரியர்"

**கேள்வி :**

அஞ்சிலே ஒன்று ஆருக ஆரியர்க்காக ஏகி என்பதிலுள்ள ஆரியர் என்பதை ஆருயிர் என்று அண்ணாமலைப் பல்கலைக் கழகம் திருத்திவிட்டது! வேறு இடத்தில் கம்பர் ஆரியர் என்ற சொல்லைச் சொன்ன தில்லையா?

**பதில் :**

பல இடங்களில்.

ஆரியன் இளவலை நோக்கி ஐயநீ
சீரிய அல்லன செப்பல் என்றபின்
பாரிடை வணங்கினன் பரியும் நெஞ்சினன்
தேரிடை வித்தகன் சேறல் மேயினன்.

என்பதையும் நோக்குக.

ஆரியன் — இராமன்.

---

## உறுப்பினர்க்கு...

அரையாண்டு சந்தாத் தொகை
கட்டிய உறுப்பினர்கள்
கட்டிய தொகை 21-11-58
இசை இருபத்தாறுடன்
முடிவடைவதால்
தங்கள் தங்கள் உறுப்பினர் ரசீதைப்
புதுப்பித்துக்கொள்ளவும்.

—அமைச்சர்

மருத்துவப் பகுதி (சென்ற இதழ்த் தொடர்ச்சி)

# தொழுநோய்

"சித்தன்"

### நோய்க் குறிகள்:

உடல்தோலில் செம்மைநிற வண்ணங் காட்டும்;
உணர்ச்சியழித் துறுதோலில் தடிப்புக் கூட்டும்;
முடமாக்கி யுறுப்புக்கள் வனப்பைப் போக்கும்;
முகப்பொலிவை முடித்துவிடும்; முனம்சு மந்தே,
கடல்போலு மன்புயைமை காட்டிக் காத்த
காதற்ருய் ஆனாலும் கருதா ளப்பா!
படநாகந் தேரையினைப் பற்றல் போலப்
பற்றுமிது; மற்றொன்று பற்ரு நோயே!

இந்நோய் 2 வகை ஒன்று பற்றும்; மற்றொன்று பற்ருது.

### தடுக்கும் முறை:

நோயுடைய தாய்பெற்ற மகவை, அன்னாள்
நோய்பற்ரு மற்காக்கப் பிரித்தல் வேண்டும்;
நோயுடைய பணியாளர் நோயே யில்லா
நுண்மகவுக் கந்நோயை நுழைப்பர்; நீக்கு
வாயுடனே அவர்தொடர்பை; வளரும் இந்நோய்
வழிவழியே வருவதல்! தொற்றும் நோய்தான்!
தாயுரிமை மகனுரிமை தமைப்பார்க் காதே;
தனியிடத்தே அவர்வாழ வகைகள் செய்வாய்!

### தொற்றும் வழிகள்:

இல்லத்திற் பெற்ருேர்,சுற் றத்தார், நண்பர்
இனத்தவர்கள், பணிசெய்வோர் இவர்க ளாலும்
கல்விபயில் கூடம்,தேர் திருவி ழாக்கள்,
கண்காட்சி நிலையங்கள், கடல்போல் மக்கள்
செல்லும்பல் லூர்தியிலும் இந்நோய் தொற்றும்;
தெரிந்துடனே நன்மருந்தைத் தேடி யுண்க!
நல்லாவின் மரம்வீழ்த்தல் நம்மா லாமோ?
நன்முளையில் அதைநம்மின் நகம்வீழ்த் தாதோ?

### சில விதிகள்:

நல்லொழுக்க முடையாரை நாடா திந்நோய்!
நல்லுணவால் நோய்போகும்; நன்மை சேரும்;
நல்லறிவைப் பரப்புவது மிகநன் றிந்த
நாட்டில்;நோய் மூலம்நா மறிதல் வேண்டும்!
நல்லுடலுக் குடற்பயிற்சி நாளும் செய்க!
நற்காற்ருல் வரும்நன்மை நவிலொ ணுதே!
நல்லமருத் துவர்வாய்ச்சொல் நன்ம ருந்தாம்!
நாடோறு மவர்உதவி நாடல் நன்றே!

>o✱o<

மாணவர் பகுதி

# பாட்டனும் பாலனும்

புதுவை, வித்துவான், வை. மாணிக்கசாமி.

பள்ளியை விட்டு வந்து
  பாலன்தான் ஒருநாள் மாலை
முள்ளுடை ரோசாப் பூக்கள்
  முழுவதும் நிறைபூங் காவில்
துள்ளியே திரியப், பாட்டன்
  துணையொடு சென்ருன்; ஆங்குக்
கிள்ளினுன் ஒருபூ; கையைக்
  கீறின முடகள் நன்ருய்.

"அப்பாடா" என்று பாலன்
  அலறினுன். பாட்டான் என்ன
செப்படா என்று கேட்டார்;
  சிறுவனும் முட்கள் என்ருன்;
தப்படா உன்றன் செய்கை
  தக்கவர் முட்கள் மீது
கைப்படா வாறு பூவைக்
  கருத்துடன் பறிப்பார் என்ருர்.

கண்களைக் கவரும் பூக்கள்
  கண்டுநீ மயங்கி விட்டாய்;
மண்ணின்மேல் இனிமைக் குள்ளும்
  மறைந்திடும் துன்பம் என்னும்
உண்மையை இனிமே லேனும்
  உணர்வாய்நீ; எதைச் செய்தாலும்
திண்ணமாய் ஆய்ந்த பின்னர்ச்
  செய்திடல் நன்றே என்ருர்.



# பார்ப்பனரும் தமிழும்!

— பார்வேந்தன் —

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்று ஒரு நிலையான கடவுட் கொள்கையுடையவராய் வாழ்ந்து வந்த சங்ககாலத்தமிழ் மக்கள் பின் ஆரியர் தம் வருகையால் தாக்குண்டு தங்களது நிலையில் இருந்து தாழ்ந்தனர். இற்றைக்கு ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இத்தாக்குதல் தமிழகத்தில் நிலை பெற்று வேறூன்றி இன்று வரை நிலைத்து விட்டது. அதனுல் தமிழர்தம் பண்பாடும் நாகரிகமும் நிலைகுலைந்தது. ஆரியர்தம் பழக்க வழக்கங்கள் தமிழர்களிடையே பரவி நின்றது.

வேதங்களிலும் பிறவற்றிலும் வல்ல பார்ப்பனர்கள் இங்நாட்டிற்கு வந்தமையால் அவர்தம் தொகை நாளுக்கு நாள் பெருகப் பெருகப் பழந் தமிழ்ச் சைவசமயம் அப்பார்ப்பனரது வைதிக சமயத் தோடு இரண்டறக் கலந்தது. எனவே அவர்தம் உருத்திர வணக்கம் சிவ வணக்கத்தோடு கலந்து விட்டது. வேதவேள்வியே இல்லாத பலழய சிவன் வடவர் தம் கலப்பால் வேள்விக் குரிய மகாதேவனுகவும் தமிழ் முருகன் சுப்பிரமணியனுகவும் தமிழ்க் கொற்றவை துர்க்கையாகவும் மாறுபட்டனர். இஃதே போன்றே! ஐயனுர் சிவனது அம்சம் ‘விநாயகர் சிவனது பிள்ளை’ என்றெல்லாம் கூறி அதற்கேற்பக் கதைகள் கட்டப்பட்டது. இதுபோன்ற மாறுபாடுகள் கி. பி. முதல் ஆறுநூற்றுண்டுகள் வரை நடந்து. முடிந்தன என்று வரலாற்று ஆசிரியரான டாக்டர். மா. இரசாமாணிக்கனுர் போன்ருர் கூறுகின்றனர்.

வந்தேறிகளான பார்ப்பனர்களால் தமிழர் சமயம் எவ்வாறு நஞ்சுண்டது என்பது மேற்கூறிய கருத்துக் களால் தெளிவுறும். இவ்வடவர்தம்கலப்பு அதிகம் பரவாத சங்கத்திற்கு முற்பட்ட நாட்களில் தமிழர்தம் சமயமும் கொள்கையும் எவ்வாறு இருந்தது என்பது ஈண்டுச் சற்று எண்ணி ஓர்ந்து தெளியத் தக்கது.

பழந்தமிழர் இயற்கை அழகினையே உயர்ந்த பொருளாக எண்ணி அதனையே கடவுளாக மதித்து வழிபட்டு வந்தனர். இயற்லகயின் அழகில் தங்கள் உள்ளத்தை ஈடுபடுத்திய தமிழ் மக்கள் தாம் கண்ட குறிஞ்சி முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நானிலத்திற் கண்ட அழகுக்கு சேய், மால், வேந்து வண்ணம் என்று பெயரிட்டனர். இவ் வியற்கை அழகுப் பெயர்கள் தொல்காப்பியனுர் காலத்திலேயே கொள்ளப்பட்டுப் பின் சமயவாதிகளால் பல கடவுள்களாகப் பகுக்கப்பட்டன. எனவே பழந்தமிழ் மக்கள் கொண்ட கடவுள் இயற்கை அழகு என்பதை மட்டும் நாம் மறத்தலாகாது என ‘முருகன் அல்லது அழகு கண்ட’ திரு, வி. க. கூறுகிருர்

மேலும் அவர் குறிஞ்சிநிலக் கடவுளாகிய முருகனை மணம், இளமை, கடவுட் தன்மை, அழகு என்னும் நான்கு சொற்களால் கூறி இயற்கையே முருகன் என்று கண்டார்.

இவ்வாறே இயற்கையே கடவுளென வழிபட்ட பண்டைத் தமிழகத்தில் பார்ப்பனர்கள் பரப்பி விட்ட புராணக் கதைகள் பலவாறு நடமாடத் தொடங்கின. எனவே சிவனுக்கும் உமைக்கும் உலகில் ஒருவனுக்கும் ஒருத்திக்கும் பிறக்கும் குழந்தைபோல் முருகன்பிறந்தான் என்னும் கட்டுக் கதை போன்றும், ஆறுமுகம் பன்னிரண்டுகை என்பனபோன்ற நம்பத்தகாத பொய்க்கூற்றுக்களும் மலிந்தன.

அறிவு பெருகிய இற்றைநாளிலேயே நாம் பல வாறு இடர்படுவது கண்கூடு. ஏன் இக் கடவுள் ஆராய்ச்சியினில் முருகனைப்பற்றி நிறுவுவதற்கன்று.

குறுந்தொகையிலே ஒரு பாடல் – முதற்பாடல்– கடவுள் வாழ்த்து - பெருந்தேவனுர் பாடியது. அதுவும் முருகனைப்பற்றியது அங்கேதாம் நாம் ஆராய்ச்சிக்கு வரவேண்டியதிருக்கிறது. ஏன் எனில் ‘குறுந் தொகை விளக்கம்’ என்ற பெயரில் ரா. இராகவையங்கார் ஒரு விளக்கவுரை குறுந்தொகை முதல் நூற்றுப் பத்துப்பாடல்களுக்கு எழுதி வெளியிட்டுள்ளார். அவர்தம் நுண்மாண் நுழைபுலத்தால் நூலுள் பலசிறப்புக்களை எடுத்துக்கூறிச்செல்லினும் தம் வடநூற் கொள்கையை விடுத்துச்சென்ருரில்லை.

அப்பாடலிற் ஓர் அடி அது “நெடுவேற் சேவலங் கொடியோன் காப்ப” என்பது ஒன்று. அதற்குப் பொருள் கூறவந்த திரு. ஐயங்கார் என்னகூறுகிருர் என்பதைப் பாருங்கள்.

“முருகக் கடவுள் வடிவங்களுள் இருகையுடைய வடிவே சாத்துவிக வடிவென்றும் அவ்

# திராவிடர் கழக வாழ்த்துப் பண்

★ முகை. மா. பாண்டியன் ★

வாழ்க வாழ்க வே!
வளர்ந்தோங்கியெம் கழகம் சிறந்து
வாழ்க வாழ்க வே!!

சிந்தனை சிறிதும் இன்றியே நாட்டில்
சீரிலாக் கொள்கைகள் செயல்கள் அனைத்தும்
நஞ்செனக் கொண்டு நலிந்து வாடும்
நிலையினைப் போக்கும் திராவிடர் கழகம் (வாழ்க)

அறியாமை யென்னும் நிலத்தினில் எவையும்
புரியாத மூட நம்பிக்கைப் பயிரை
வளர்த்து வாழ்வின் வளத்தைக் கெடுக்கும்
தளைகளை ஒழிக்கும் திராவிடர் கழகம் (வாழ்க)

உண்மை யறிவும் உலகத் தன்மையும்
உயர்ந்த கருத்தையும் பயன் விளைகின்ற
பகுத்தறிவின் சீர்க் கொள்கைகள் யாவும்
பகன்று பாடுறும் திராவிடர் கழகம் (வாழ்க)

செந்தமிழ் நாடின்று தீயோர் சிலரால்
நொந்துசீ ரழியும் நிலையினைப் போக்கிச்
சிறந்து விளங்கச் செயல்பல புரியும்
சிறந்த திராவிடர் திறனுர் கழகம் (வாழ்க)

வண்டமிழ் நாடு வடவர்கள் ஆட்சியில்
சுரண்டப் படுகின்ற கொடுமையைப் போக்கி
பண்டைத் தமிழகப் பெருஞ்சிறப் பின்னுள்
மாண்டது மீண்டெழ உழைக்கும் கழகம் (வாழ்க)

---

வடிவில் வலக்கையின்கண் சத்தியும் இடக்கையிற் குக்குடமும் அமைத்து வழிபடுதல் நன்றென்றும் 'குமாரதந்திரம்' என்னும் நூல் கூறுமென்பவாதலான் அதற்கேற்பவே வேலுங் கோழியுமுடைமை குறித்தார் 'க்ரௌஞ்ச பேத்தா' என்னும் திருவுருவத்தினை இவ்வின்பப் பாடற்ஜெருகைக்கு நினைந்தது அவ் வடிவம் காமனுக்குரியகருப்புவில்லையும் மலர்க்கணையையும் ஏந்துமியல்பினதாதல் பற்றியென்று உய்த் துணரலாம். இவ்வுண்மை ஸ்ரீ த த் து வ நிதியிற் காணலாம்'' என்கிருர்.

குறிஞ்சிநிலக் கடவுளான முருகன் எல்லோராலும் பேசப்படுகிற தமிழரின் முதற்கடவுள் என்பர் அறிஞர் பெருமக்கள். அது பொறுக்காத திரு, ஐயங்கார் அது கூடவடவரின் கடவுளே அதையேதான் தமிழரும்தமக்கும்ஒப்புதலாகக்கொண்டு வழிபட்டனர் என்று கூறுகிருர். அவர் கூற்றை அந்நூலுக்கு முகவுரை எழுதிய தமிழ்ப்பேராசிரியர் டாக்டர் அ. சிதம்பர நாதச்செட்டியார் என்ன கூறிமறுக்கிருர் என்பதை அப்படியே உங்கள்முன் வைக்கிறேன்.

''இவ்வுரையகத்தே சிலவிடங்களிற் பொறுத்தமில்லாதனவும் உள. அவை ஆசிரியரால் விரும்பியவாறு வலிதிற் புகுதப் பெற்றனவாகத் தோன்றுகின்றன. இந்நூல் கடவுள்வாழ்த்தாகிய பெருந்தேவனுர் பாடலில் 'நெடுவேற் சேவலங் கொடியோன் காப்ப' என்ற தொடரால் முருகன் ஒருகையில் வேலும் மற்றொருகையில் கோழிக் கொடியும் கொண்டமை கூறுமுகத்தால் அப்பெருமானது இருகையுடைய சாத்துவிகத் திருமேனியே இப்பாடலிற் குறிப்பிடப்பட்டதென விளக்க வந்த ஐயங்காரவர்கள் இவ்வடிவு வடமொழியிற் குமார தந்துரத்துட் கூறப்பட்டதென்றும், இவ் வடிவமைத்து வழிபடுதல்நன்றெனக் குமாரதந்திரநூல் கூறுதற்கேற்பவே பெருந்தேவனுரும் முருகன் வேலுங் கோழிக் கொடியும் உடைமை குறித்தார் என்றும் கூறுகிருர்கள். குறிஞ்சிக் கடவுளாகிய முருகவேள் வழிபாடு தமிழ்நாட்டில் வழங்கும் மற்றைத் தெய்வ வழிபாடுகளைவிடத் தொன்மையும் சிறப்பும் வாய்ந்ததொன்றாகும், இவ்வழிபாடு தென்னுட்டிலன்றி வட நாட்டில் வட மொழியாளரால் தோன்றுதொட்டு மேற்கொள்ளப்படாத இயல்பினதாம். அன்றியும்வடமொழியில்தந்திரங்கள்தோன்றியது கி. பி. ஆரும் நூற்ருண்டிற்குப் பிந்தியதென ஆராய்ச்சியாளர்கள் துணிந்து கூறுகின்றனர். ○

(தொடரும்)

---

○ வடமொழிப் பேராசிரியர் சர். மானியர் வில்லியம்ஸ் எழுதிய "இந்திய அறிவு மேன்மை" என்ற புத்தகம் (4ம் பதிப்பு) 524ம் பக்கம் என்க.

# இன்பக் கனவு

—பாலு—

நடு இரவு வெண்ணிலவை விடியற் காலை என்று எண்ணிய ஓரிரு காக்கைகள், கா...கா எனக் கரைந்து, எங்கும் நிலவியிருந்த அமைதியைக் குலைத்தன. காகங்களின் குரலால் உறக்கம் கலைந்த தோழி அலுத்துக் கொண்டே புரண்டு படுத்தாள். இமைகளை இறுக மூடித் தூங்க முயன்றாள். ஆனால் ணிங்...ணிங் என்ற ஒலி, மூடிய இமைகளைத் திறக்கச் செய்தது. உற்றுக் கேட்டாள். வளையலொலி என்பதை உணர்ந்தாள்; அருகிலிருந்த அகல் விளக்கைத் தூண்டி விட்டுக் கூர்ந்து நோக்கினாள். தலைவி தன் படுக்கையைத் தடவித் தடவி எதையோ தேடுவதைக் கண்டு, ஏம்மா! என்ன தேடுகிறீர்கள்? என்ன வேண்டும் என்று வினவினாள்.

தோழியின் குரலைச் செவிமடுத்த தலைவி தூக்க மயக்கம் தெளிந்தாள். தான் கண்டது கனவு என்று உணர்ந்ததும் நாணத்தால் முகத்தைத் தலையணையில் புதைத்துக் கொண்டாள். தோழியோ விளக்கை அடுக்கிக் கொண்டே போனாள். மற்றவர்கள் விழித்துக்கொள்ளக் கூடாதே என்ற அச்சத்தால் தலைவி, தோழியைத் தன் அருகே அழைத்து மெல்லச் சொன்னாள்.

"தோழி! போர் செய்வதற் கென்றே மதம் பிடித்த யானைகளை அடக்கிப் பழக்கி வைத்திருக்கும் பாண்டியன் என்னை வந்தடைந்தான். நானும் என் படுக்கையில் சிறிது இடம் கொடுத்தேன்; உடனே அவன் "பொன்னே! மணியே! மலரே! அமிழ்தே!" என்று கூறி என்னைத் தழுவி இறுக அணைத்தான் உணர்ச்சி வயப்பட்டு மயங்கிய நான் அவன் இன்னும் இருக்கின்றானா என்று படுக்கையைத் தடவிப் பார்க்கையில் உன் குரல் கேட்டு முற்றும் விழித்தேன்" என்றாள்!

களியானைத் தென்னன் கனவில்வந்(து) என்னை
அளியான் அளிப்பானே போன்றான் – தெளியாதேன்
செங்காந்தள் மெல்விரலால் சேக்கை தடவந்தேன்
என்காண்பேன் என்அலால் யான்

(முத்தொள்ளாயிரம்)

—○—

# இரணியனுக் கெதிர்பேசும் பிரகலாதன்!

▷ சைதை-ஓடையான் ◁

<□>

வஞ்சகமே உருவானேன் அறிஞனெனும் துரையான்
வெஞ்சமரில் தலைகாட்ட அஞ்சி நடுங்கிடுவான்
பஞ்சையறைப் பார்த்துமே பொய்க்கண்ணீர் வடிப்பான்
அஞ்சாத பெரியாரை வஞ்சித்து வாழ்வான்!

"திருவிடத்தை மீட்டிடுவேன் சேர்வீர்க ளென்றான்
மறுவிடையில் பார்ப்பன ரெங்கேபோவா" ரென்றான்
ஒருநாளும் நம்மவரை வாழ்ந்திடவே செய்யான்
பெருமையுடன் உரிமைபெற பெரியார்சொல் கேளீர்!

சாணக்யன் வழிவழியே தோன்றியவன் தானே!
பாணக் தொடுத்திட்ட பரம்பரை யான்தானே
நாணக் துறந்திட்ட நரிகள் மகன்தானே?
வீணர்என ஆக்கிடுவான் விழித்தெழுவீ ரின்றே!

திட்டுபவர் வாய்பார்த்துத் தித்திக்கு தென்பான்
பட்டுடுப்போர் நிழல்பார்த்துப் பல்லிளித்து நிற்பான்
வெட்டுகின்ற கத்திகண்டால் வெலவெலத்துப் போவான்
விட்டானோ சூதாடும் ஆரியர் வழக்கம்?

பெரியார்க்குப் பிறந்திட்ட பிள்ளைநா னென்பான்!
அரியாசனம் ஏறும் அருகதையு முண்டா?
இரணியனுக் கெதிர்பேசும் பிரகலாதன் தான்
தெரியாத திருவிடரே தெரிந்துகொள்வீ ரினிமேல்!

∝○★○∝

குயில்

Regd. No. M. 7030.

நாட்டுப் பாட்டு

# புலிக்கு நாய் எந்த மூலே?

தமிழர்க்குத் தமிழே தாய்மொழி என்றேம்!
தமிழகம் தமிழர்க்குத் தாயகம் என்றேம்! (தமிழர்க்கு)

தமிழ்நாட்டில் அயலவர்க் கினிஎன்ன வேலே?
தாவும் புலிக்கொரு நாய்எந்த மூலே? (தமிழர்க்கு)

தூங்கிய துண்டு தமிழர்கள் முன்பு–பகை
தூளாகும் அன்றே எழுந்த பின்பு?
தீங்கு புரிகின்ற வடக்கரின் என்பு
சிதைந்திடச் செய்திடும் தமிழரின் வன்பு (தமிழர்க்கு)

அவனவன் நாட்டில் அவனவன் வாழ்க! – மற்
றயல்நாட்டைச் சுரண்டுதல் அடியோடு வீழ்க!
துவளாத வாழ்க்கை உலகெலாம் சூழ்க
தூக்கிய கைகள் அறம்நோக்கித் தாழ்க (தமிழர்க்கு)

தமிழனுக் குலகம் நடுங்கிய துண்டு – அங்குத்
தன்னுட்சி நிறுவிட எண்ணிய துண்டா?
தமதே என்று பிறர்பொருள் கொண்டு
தாம்வாழ எண்ணினேர் எங்குளார் பண்டு! (தமிழர்க்கு)

ஆசிரியர், வெளியிடுவோர், பொறுப்பாளர்: பாரதிதாசன், புதுச்சேரி.
அச்சிடுவோர்: மா. தண்டபாணி, பழநியம்மா மின்விசை அச்சகம், புதுச்சேரி.